23.01.2025
OS. No. 102/2023

**வா.சா.1 –** திருமதி. புவனேஷ்வரி க/பெ.சுரேஷ்குமார்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

நான் டிப்ளமோ எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன் படித்து இருக்கிறேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். நான் 2001 ஆம் வருடத்தில் படிப்பை முடித்தேன். அதன் பிறகு அப்ரண்டிஸ் பயிற்சிக்கு சென்றேன். பாரத மிகு மின் நிலையத்திற்கு அவ்வாறு பயிற்சிக்குச் சென்றேன் . எனக்கு 2002 ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது. எனது அப்பா பாரத மிகு மின் நிலையத்தில் பொறியாளராக பணியாற்றி இருந்தார். என் அம்மா இல்லறப் பணிகளை மேற்கொண்டு வந்தார். என் தகப்பனாருக்கும் தாயாருக்கும் பூர்விக சொத்துக்கள் எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்திருக்கக்கூடிய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருக்கக்கூடிய சொத்துக்கள் அனைத்தும் என்னுடைய தகப்பனாரின் சுய சம்பாத்தியத்தின் அடிப்படையில் கிரயம் பெறப்பட்ட சொத்துக்கள் ஆகும். என் அப்பாவிற்கு வங்கி கணக்குகள் இருந்தது. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் அவ்வாறான வங்கி கணக்கு இருந்தது. என்னிடம் காட்டப்படுவது என் அப்பாவின் வங்கிக் கணக்கு பட்டியல் என்று சொன்னால் பார்த்தால் தான் என்னால் சொல்ல இயலும். கடந்த 28.7.2020 அன்று என் தகப்பனாரின் வங்கிக் கணக்கில் இருந்து என் பெயருக்கும் என் கணவர் பெயருக்கும் ரூபாய் 20 லட்சம் பண பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரிதான் .என்

அப்பா கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பாக பணி நிறைவு பெற்றார். என் அப்பா பணி நிறைவு பெற்றபோது அவருக்கு பாரத மிகு மின் நிலையத்தில் இருந்து வழங்கப்பட்ட பணிக்கால நற்பலன்களை எனக்கும் என் தம்பிக்கும் பிரித்துக் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வங்கி கணக்கு பட்டியலில் ரூபாய் 22,86,370 என உள்ளதில் முருகேசனுக்கு கொடுக்கப்பட்ட ரூபாய் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் போக மீதி பணம் ரூபாய் 20 லட்சம் என்னுடைய கணக்கிற்கு பரிமாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எனக்கு என் தகப்பனார் கொடுத்த பிறகு அவரது வங்கி கணக்கில் ரூபாய் 36,323/– மட்டும்தான் மிச்சம் இருக்கிறது என்று சொன்னால் சரிதான்.அந்த கணக்கு விபரப்பட்டியல் பிரதிவாதி தரப்பு சான்றாவணம் 1 ஆகும். என் அப்பாவிடம் இருந்து நான் பெற்ற ரூபாய் 20 லட்சம் பணத்தைக் குறித்து நான் தாக்கல் செய்த முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. என் அப்பா 21.5.2021 அன்று இறந்துவிட்டார். என் அப்பாவிற்கு பாரத ஸ்டேட் பேங்க் கணக்கு தவிர பாரத மிகு மின் நிலையத்தில் உள்ள அஞ்சலகத்திலும் சேமிப்பு கணக்கு உண்டு என்றால் முன்பு இருந்தது. அஞ்சலக சேமிப்பு கணக்கு பற்றிய விவரத்தை நான் தாக்கல் செய்த முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் தாள்களில் அஞ்சலக சேமிப்பு கணக்கு பற்றிய விவரம் இருக்கிறதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. என் அப்பா இறந்த பிறகு அஞ்சலக சேமிப்பு கணக்கு என் அம்மா பெயரிலும் இந்த வழக்கின் பிரதிவாதியாகிய என்

WEB COPY

சகோதரர் பெயரிலும் மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அம்மா இறந்த பிறகு தான் அஞ்சலக சேமிப்பு கணக்கு என் அப்பா பெயரில் இருந்தது என் அம்மா பெயரிலும் என் சகோதரர் பெயரிலும் மாற்றம் செய்யப்பட்ட விவரத்தை தெரிந்து கொண்டேன். என் அம்மா உயிருடன் இருக்கும் வரையிலும் என் அம்மாவை யார் பராமரித்து வந்தார்கள் என்றால் நான்தான் பராமரித்து வந்தேன். நான் உறையூரில் உள்ள அகிலாண்டேஸ்வரி நகரில் வசித்து வருகிறேன். என்னுடைய வீட்டில் என் அம்மா இரண்டு மாத காலம் இருந்தார். அதன் பிறகு என் அம்மா தனக்குச் சொந்தமான வீட்டில் வசித்து வந்தார். அந்த வீடு அரியமங்கலத்தில் இருக்கிறது. அந்த வீட்டை தான் இந்த வழக்கில் இரண்டாவது இலக்கச் சொத்தாக காண்பித்து இருக்கிறேன். இரண்டு மாத காலம் என்னுடன் இருந்த அம்மா எதன் காரணமாக அரியமங்கலத்தில் உள்ள வீட்டிற்கு சென்றார் என்றால் அவரது உடைமைகளை வைப்பதற்கு சொந்த வீடு வேண்டும் என்று அவர் கூறிய காரணத்தினால் அரியமங்கலத்திற்கு சென்று விட்டார். நான் இரண்டு மாத காலம் என் அம்மாவை என்னுடன் வைத்திருந்த போது என் அம்மா அஞ்சலக சேமிப்புகணக்கில் இருந்த பணம் ரூபாய் 21,50,000/-த்தையும் என் பெயரிலும் என் கணவர் பெயரிலும் மாற்றிவிட்டு என் அம்மாவை அரியமங்கலத்திற்கு கொண்டு போய் விட்டு விட்டு வந்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அரியமங்கலத்திற்கு என் அம்மாவை கொண்டு போய் விட்ட பிறகு இரண்டு மாத காலத்தில் என் அம்மா இறந்து விட்டார். என் அம்மா இறப்பதற்கு ஆறு மாத காலத்திற்கு

முன்பாக பிரதிவாதி என் அம்மாவை அழைத்துச் சென்றார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தான் என் அம்மாவை விரட்டிவிட்டார். எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். எனது பெரிய மகனுக்கு 22 வயது நடைபெறுகிறது. எனது சின்ன மகனுக்கு 19 வயது நடைபெறுகிறது.எனது சின்ன மகன் மீது பிரதிவாதியின் மனைவி கொடுத்த புகாரின் பேரில் பாலியல் குற்றங்களில் இருந்து சிறார்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கின் குற்ற எண் 8/2023 ஆகும். அந்த வழக்கு திருவெறும்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு அசல் வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் என் மகன் மீது அந்த குற்ற வழக்கு போடப்பட்டது. குற்ற வழக்கை போடப்போவதாக மிரட்டி வந்தார்கள் அதன் அடிப்படையில் போட்டுவிட்டார்கள். நான் இந்த வழக்கை21.3 .2023 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிக்கு அறிவிப்பு ஏதாவது அனுப்பினேனா என்றால் இல்லை. அரியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு அங்கு வைத்து என்னை மிரட்டி எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் . பிரதிவாதியின் மனைவி என் மகன் மீது கொடுத்த குற்ற வழக்கில் குற்றச்சம்பவம் ஆனது 2019 ஆம் வருடத்தில் இருந்தே நடைபெற்றதாக குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு

தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா 23.1.2023 அன்று இறந்து போனார். என் அம்மா இறந்தவுடன் அவருக்கு சொந்தமான உடைமைகள் அனைத்தையும் நான் எடுத்துச் சென்றேன் என்றால் சரியல்ல. நான் என் அம்மாவிற்கு சொந்தமான பொருட்களை எடுத்துச் சென்றதாக பிரதிவாதி அரியமங்கலம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் விசாரணை நடைபெற்றது. அந்த புகாரின் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையின் போது தான் காவல்துறையினர் என்னை எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத் தி 8 ல் பிரதிவாதி அரியமங்கலம் காவல் நிலைய காவல் ஆய்வாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதல்வர் பொதுமக்கள் குறைதீர்க்கும் தனிப்பிரிவு ஆகியோரிடம் கடந்த 2023 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் பல்வேறு தேதிகளில் எனக்கு எதிரான பொய்யான புகாரை கொடுத்தார் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். அதன் பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். என் கணவர் இன்வெர்ட்டர் மற்றும் பேட்டரி தொழில் செய்து வருகிறார். எனது பெயரில் எந்தெந்த வங்கிகளில் கணக்கு இருக்கிறது என்றால் அதை எதற்காக நான் சொல்ல வேண்டும். என் அப்பாவின் வங்கி கணக்கில் இருந்து பெற்ற பணம் ரூபாய் 20 லட்சம் மற்றும் என் அம்மாவின் அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கில் இருந்த பணம் ரூபாய் 21 லட்சத்து 50 ஆயிரம் ஆகியவற்றை நான் எனது வங்கி கணக்கில் வைத்திருக்கிறேன் என்பதை

காட்டுவதற்கு தான் வங்கி கணக்கு விவரம் கேட்கப்படுகிறது என்றால் அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நான் எந்த பணமும் பெறவில்லை. அந்தப் பணங்கள் அனைத்தும் என் வங்கிக் கணக்கிலும் எனது கணவர் வங்கி கணக்கிலும் இருந்து வருகிறது என்றும் அதை பார்த்தால் தெரியவரும் என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும் போது எங்கள் இருவருக்கும் பணத்தை பிரித்துக் கொடுத்துவிட்டார். இந்த விவரத்தை நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் கூறுவது போல் என் அப்பா பணத்தை பிரித்துக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான்தான் பிரதிவாதிக்கு தெரியாமல் என் அப்பா மற்றும் அம்மாவின் வங்கி கணக்கில் இருந்த பணங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு என் அப்பா ரொக்கமாக பணத்தை கொடுத்து விட்டார்.என் அப்பா பிரதிவாதிக்கு ரொக்கமாக பணத்தை கொடுத்ததாக நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து என்னை மிரட்டி கையொப்பம் போட சொன்னார்கள் அதன் காரணமாக தாக்கல் செய்திருக்கிறேன். என் அம்மா இறப்பதற்கு சுமார் எட்டு மாதங்களுக்கு முன்பு வரை எனக்கும் என் சகோதரருக்கும் இடையில் நல்ல பேச்சு வார்த்தை இருந்து வந்தது. என் கணவர் நடத்தி வந்த பேட்டரி மற்றும் இன்வெர்ட்டர் கடையில் தான் சுமார் 18 வருடங்களுக்கு முன்பாக என் தம்பி வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். என் அம்மா இறக்கும் வரை எனக்கும் என் தம்பிக்கும் இடையில்

Above

சொத்து குறித்த பிரச்சனை இல்லை என்று சொன்னால் சரியல்ல.என் அம்மா பெயரில் பாரத மிகு மின் நிலையத்தில் பாதுகாப்பு பெட்டக வசதி இருந்தது. அதில் சுமாராக எவ்வளவு நகைகள் இருந்தது என்றால் என் அப்பா உயிருடன் இருக்கும் போதே அதை பிரித்துக் கொடுத்துவிட்டார். என் அம்மாவுக்கு சொந்தமான நகைகள் எதுவும் இல்லை. என் அம்மாவின் லாக்கரில் சுமார் 75 பவுன் தங்க நகைகள் இருந்தது என்றும் அந்த நகைகளை என் அம்மாவை நான் பார்த்துக் கொள்வதாக வீட்டிற்கு அழைத்துச் சென்று அவரிடம் கையொப்பம் வாங்கி நகைகளை எடுத்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா இறந்த பிறகு இந்த விபரங்கள் அனைத்தும் பிரதிவாதிக்கு தெரிய வந்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையில் நடைபெற்ற விசாரணையின் போது நான் நகைகளையும் பணத்தையும் திருப்பிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதைத்தான் நான் தாக்கல் செய்த முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பெரியவர்கள் முன்னிலையில் சமரசம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆகிய பாகபாத்திய விடுதலை ஆவணம் என் அம்மா உயிருடன் இருக்கும் போது எழுதப்பட்டது என்று சொன்னால் மிரட்டி வாங்கப்பட்டது ஆகும். நான் அந்த ஆவணத்தை பிரதி பிரயோஜனம் பெற்றுக் கொண்டுஎழுதிக் கொடுத்து என்று சொன்னால் சரிதான் அதை நான் ஒப்புக்கொள்கிறேன். நான் அந்த ஆவணத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.5 ஆகிய

பாகபாத்திய விடுதலை ஆவணம் என்னிடம் மிரட்டி கையொப்பம் வாங்கப்பட்டது என்று என் அம்மா உயிருடன் இருக்கும் வரை நான் எந்த ஒரு புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என் அம்மா உயிருடன் இருந்த காலத்தில் நகைகள் மற்றும் ரொக்கப் பணத்தை நான் எடுத்துச் சென்று விட்டதால் அந்த அசையும் சொத்துக்களை பிரதிவாதி என்னிடம் திருப்பித் தருமாறு கேட்ட காரணத்தினால் தான் நான் அசல் வழக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் மகனுக்கு எதிராக போக்சோ வழக்கு நிலுவையில் இருப்பதால் அந்த வழக்கை திரும்பப் பெறுவதற்காக பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்து அழுத்தம் கொடுக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதியான மிரட்டி வா.சா.ஆ.5 ஆகிய பாகபாத்திய விடுதலை ஆவணம் வாங்கப்பட்டதாக கூறும் சங்கதி உண்மைக்கு புறம்பானது என்றால் சரியில்லை. நான் இந்த வழக்கில் கேட்டிருக்கக்கூடிய பரிகாரம் நிலைக்கத் தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல.வா.சா.ஆ.5 ஆகிய பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதே ஆவணத்தை பொறுத்து இல்லாத நிலையது என விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை மறைத்து சரியான நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தாமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்க

தக்கதுஇல்லை என்றும் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்றால் சரியல்ல. முதல் இலக்கச் சொத்தை பொறுத்து வா.சா.ஆ.5 ஆகிய பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது நான் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்பது நிலைக்கத் தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல.இரண்டாவது இலக்க சொத்தை பொறுத்தும் நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதாக இல்லை என்று சொன்னால் சரி அல்ல. அசையும் சொத்துக்கள் விபரத்தை நான் மறைத்து அதை பிரதிவாதிக்கு கொடுக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக வழக்கை மோசடியாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதாக இல்லை என்று எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe